இலக்கணங்களில் இயற்கையும் சுற்றுசூழலும் பாடநூல் வழி

வே. அமிர்தம்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்

முனைவர் க.செந்தில்ராஜா
ஆய்வு நெறியாளர்
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்
DOI: https://doi.org/10.5281/zenodo.19220447

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கணத்திற்கானபொருள் எழுத்துக்களை உச்சரிக்கும்போது உண்டாகும் இடர்பாடு. திரிபு என்பன நன்னூல் தொல்காப்பியம் வழி மொழியப்பட்டுள்ளது. ஐம்பூதங்களால் ஆன இவ்வுலகில் மரபு காத்தல் பற்றிப்பாடநூல் பகுதியுடன் சொல் உரிச்சொல்லாக சீர்மையுடன் உயர்வாகப் பெயர் பெற்ற தமிழ் மொழி சிறப்பு அறியமுடிகிறது. ஐம்புலன்கள் வழியான உயிர்ப் பாகுபாடு பற்றி விளங்குகிறது. தமிழ்ச்சொல் வளத்துடன் இயற்கையின் ஒரு பிரிவான தாவரப்பகுதிகளாக அடி சினை இலை கொழுந்து பூ பிஞ்சு குலை காய்கனி பழத்தோல் மணி இளம்பயிர் வகை என தலைப்பிட்டு வரிசைப்படுத்தும் பாவாணர் தம் சொல்லாராய்ச்சி பாடநூல் வடிவு அறியமுடிகிறது. சிறார்களும் அறியும் வண்ணம் ஓலி மரபு வினைமரபு விலங்குகளின் இளமைப் பெயர்களும் எளிய முறையில் அட்டவணையாக விளக்கப்பட்ட விதத்துடன் இயற்கையை அழகாய் வண்ணமிட்டு க்காட்டும் அகப்பொருள் இலக்கணப்பகுதி,அட்டவணை நூற்பாக்களுடன் கண்ணாடி என காட்சியாகிறது.

ஆய்வுக்கருவிகள்

முன்னுரை தமிழ் இலக்கணம் தமிழ் பேச்சுமொழியும் எழுத்துமொழியும் தமிழ் மொழி மரபு பல குணம் தழுவிய ஒரு உரிச்சொல் சீர்மை மொழி உயிர் (வகை) பாகுபாடு ஓரறிவுயிரில் வேறுபாடு தாவர அடிவதை கிளைப்பகுதிகள் காய்ந்த அடியும் கிளையும் பெயர் பெறுதல் இலை வகை கொழுந்து வகை பூவின் ஏழுநிலை பிஞ்சு வகை குலை வதை கெட்டுப் போன காய்கனி வகை பழத்தொல் வகை மணி வகை இளம் பயிர் வகை மரபுச் சொற்கள் ஒலி மரபுச் சொற்கள் வினை மரபுச் சொற்கள் விலங்குகளின் இளமைப் பெயர் மரபுச் சொற்கள் இயற்கை யோடியைந்த அகப் பொருள் இலக்கணம் முதற்பொருள் பெரும்பொழுது சிறு பொழுது ஐவகைத் திணைக்குரிய பெரும் பொழுது; சிறுபொழுது கருப்பொருள் உரிப்பொருள் முடிவுரை.

முன்னுரை

'நாடும் மொழியும் நமதிரு கண்கள் - என்கிறார் மகாகவி பாரதியார் காலவைள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையே நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு இலங்குகிறது நம் செந்தமிழ். அனைத்தும் உண்டென்று விடை பகர்கிறது மாணவர் தம் பாடநூலாக இயற்கையும் சுற்றுச் சூழலும் பற்றிய நம் மரபு போற்றும் தமிழ் இலக்கணம்.

தமிழ் இலக்கணம்

இலக்கணம் இலக்கு+அண்+அம் இலக்கை அண்மையில் சுட்டுவது என்பது பொருள். தமிழ் இலக்கணம் மரபின் அடிப்படையில் அமைந்து உள்ளது. முதலில் எழுந்து சொல்

பொருள் என்று தொல்காப்பியத்தில் அமைந்த நிலை யாப்பு அணி என்ற நிலையில் வளர்ச்சியும் மாற்றமும் அடைகிறது.தமிழ் என்ற சொல் இன்று கிடைக்கும் நூல்களில் முதல் நூலாகிய தொல்காப்பியத்தில் உள்ளது.[1] தமிழ் என் கிளவியும் அதனோ ரற்றே" - தொல். எழுத்து- 385 தமிழ் என்ற சொல் இனிமை நீர்மை மொழி இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் தமிழ்நூல் தமிழர் தமிழ்நாடு போன்ற பொருள்களைக் குறிக்கும் எனத் தமிழ்ப் பேரகராதி (தொகுதி - 3.பக்-1756) கூறுகிறது.[2]

தமிழ் - பேச்சுமொழியும், எழுத்து மொழியும்

வாயினால் பேசப்பட்டு பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சு மொழி ஆகும். பேச்சுமொழி மொழியின் உயிர்நாடியாக விளங்குவது. கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிமாக எழுதப்பட்டு படிக்கப்படுவது எழுத்து மொழியாகும். பேசப்படும் சூழலைப் பொருத்தும் பேச்சுமொழியின் பொருள் வேறுபடும். உதாரணமாக என்னால் போக முடியாது என்ற தொடர். ஓங்கி ஒலிக்கும் போது மறுப்பை உணர்த்துகிறது. மென்மையாக ஒலிக்கும் போது இயலாமையை உணர்த்துகிறது. இவ்வாறு சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஒற்ற இறக்கத்தால் பொருள்வேறுபடும் என்பதை[3]

எடுத்தல் பருத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமில் சிறிது உள வாகும்

என நன்னூல் நூற்பா மொழிகிறது. பேச்சு மொழியாக தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகள்பெரும்பாலும்உரக்க(வேகமாக) சொற்கள் வெளிவரும் தன்மையில் வல்லினம் அதிகம் கொண்டு அமையும். ஏனெனில் தமிழகம் ஒரு அயன மண்டலப் பிரதேசம். ஆங்கிலம் உள்ளிட்ட குளிர் பிரதேச மொழிகள் உதடுகள் பிரியா நிலையில் பேசும் தன்மை உடையது ஏனெனில் நடுங்கும் குளிர் பிரதேசத்தில் வாழும் போது தம் உடல் வெப்பம் வெளியேறக் கூடாது என்ற கட்டாயத்தில் ஆகும். இத்தகவமைப்பை இன்னும் திண்ணமாகஅறிய நம் நாட்டு நாய்கள் நாக்கை எப்போதுதொங்கவிட்டு உமிழ்நீர் மூலம் உடல் வெப்பத்தை சமநிலைப்படுத்தும். இந்நிகழ்வின் மூலம் தமிழே தமிழக இயற்கை சூழலுக்கான சிறந்த பேச்சு மொழி என கட்டமைத்துள்ளனர்.

தொல்காப்பியப் பிறப்பியலில் எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற்கூற்றியல் அடிப்படையில் விளக்கியிருப்பதை அயல்நாட்டு அறிஞர்களும் வியந்து போற்று கின்றனர். இது தமிழர்களின் மொழி அறிவாற்றலுக்கு சிறந்த சான்றாகும் ."[4]

தமிழ் மொழி மரபு

வாழ்விலும் மொழியிலும் சில ஒழுங்கு முறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இயற்கையோடு இயைந்த வாழ்வுக்குரிய ஒழுங்கு முறை ஒழுக்கம் எனப்படும். மொழிக்குரிய ஒழுங்குமுறை மரபு எனப்படும். தமிழ் மொழிக்கெனச் சில மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்பட்டு வருகின்றன. செய்யுளுக்கும் இயற்கை மரபுக்கும் உள்ள தொடர்பைப் பற்றித் தொல்காப்பியம் கூறும் செய்திகளாக

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல் நெறி வழாஅமைத்
திரிவு இல் சொல்லாடு தழாஅல் வேண்டும்.- தொல். பொருள். 1589
மரபுநிலை திரிதல் செய்யுக்கு இல்லை.
மரபு வழிப் பட்ட சொல்லின் அன".
தொல் பொருள். 1590

"மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்"
தொல். பொருள் 1591

இவ்வுலகம் நிலம் நீர் தீ சுற்று வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். இயற்கை சூழலில் உள்ள பொருட்கள் அனைத்தும்

இவ்வைம்பூதங்களின் சேர்ந்து உருவானவை ஆகும். இவ்வியற்கை உண்மையை முதலில் உலகுக்கு உணர்த்தியவர் இயற்கை காவலன் தமிழன் என்பதை அறியமுடிகிறது. உலகத்துப் பொருட்களை இருதிணைகளாவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ் மொழியின் மரபு. திணை பால் வேறுபாடு அறிந்து இவ்வுலகப் பொருட்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும். மரபுகளை மாற்றினால் பொருள் உணர்வு வேறு வேறாகிச் சொல்வேன் கருத்துக் கேட்போருக்குப் போய்ச் சேராது என்பது இயற்கை விதியாக தமிழ் உரைக்கிறது.

தமிழ்மொழியை எழுதும் முறையும் மிக எளிதுதான். அதற்கேற்ப தமிழ் எழுத்துகள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துகளாகவே அமைந்துள்ளன. 6 தமிழில் சொல் என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள். சொன்றி சோறு என்பவை அவ்வழியில் வந்தவை. நெல்லில் பதருண்டு, ஆனால் சொல்லில் பதர் இருத்தலாகாது. எல்லாச்சொல்லும்பொருள் குறித்தனவேஎன்பதுதொல்காப்பியர்கூற்று. உயிர் வளர்க்கும் உணவே சொல்லாவது போல் இயற்கைச் செல்வம் மழை நீர் மனிதர்க்கு அனைத்துமாக,

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
தூப்பாய தூஉம் மழை.” – குறள் 12

என்று அமைவது போல் இயற்கையை உயிர்நாடியாக தமிழ் மொழிகொண்டமை அறிய முடிகிறது.

பல குணம் தழுவிய ஒரு உரிச்சொல்

உரிச்சொற்களே அகராதி உருவாக்க முன்னோடியாகும். -ஓர் எழுத்தே ஒரு சொல்லாகிப் பொருள் தருவதும் உண்டு ஒரு சொல் பலபொருளைக் குறித்து வருவதும் உண்டு. இத்தகு சிறப்புடையது தமிழ்மொழி. சான்றாக மா என்னும் ஒரு சொல் மரம் விலங்கு பெரிய திருமகள் அழகு அறிவு அளவு அழைத்தல் துகள் மேன்மை வயல் வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.”[7] இப்பொழுது மொழியோடு சிறப்பு மொழி சேர்ந்து வரும் போது பொருள். எ.கா: ‘மா பூத்தது எனும்போது மரம் என்பது புலனாகிறது.

சீர்மை மொழி

சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல். தமிழ் மொழியின் பல வகை சீர்மைகளுள் அதன் சொற்சிறப்பு குறிப்பிடத்தக்கது. திணை உயர்திணை அஃறிணை என இருவகையாக அறிவோம். இதில் உயர்திணை என்பதன் எதிர்சொல் தாழ்திணை எனக் கூறாமல் அஃறிணை (அல்+ திணை உயர்வு அல்லாத திணை) என்று பெயரிட்டனர். இயற்கை விரும்பிகளான நம் முன்னோர்.

பாகற்காய் கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறால் இனிப்பு அல்லாத காய் (பாகு+அல்+ காய் பாகற்காய்) பாகற்காய் என வழங்கினர். இவ்வாறு பெயர் பதிலும் சீர்மை மிக்கது நமது தமிழ்மொழி.[8]

உயிர் (வகை) பாகுபாடு

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல உணர்வுகளின் வாயிலாக அறிவை நாம்பெறுகிறோம்இதற்குரியபொறிகளான கண் காது வாய் மூக்கு உடல். என்னும் ஐந்து உறுப்புகள் ஆகும்.அறிவின் வாயில்களான இவற்றை உயிரினங்கள் கொண்டுள்ள எண்ணிக்கை அடிப்படையில் பகுத்தனர். ஆறாவது அறிவு மனத்தால் அறிப்படுவது என்பதையும்,

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனோடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றோடு மனமே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே
- தொல்.பொருள். 1526

அறிவுநிலை	அறியும் ஆற்றல்	உரையாசிரியர்களின்) (எ.கா)
ஓரறிவு	உற்றறிதல் (தொடுஉணர்வு)	புல் மரம்
ஈரறிவு	உற்றறிதல் + சுவைத்தல்	சிப்பி நத்தை
மூவறிவு	உற்றறிதல் + சுவைத்தல்+ நுகர்தல்	கரையான் எறும்பு
நான்கறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல்	நண்டு துட்பி
ஐந்தறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல்	பறவை விலங்கு
ஆறறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் + பகுத்தறிதல் (மனம்)	மனிதன்

இவ்வுயிர்கள் இடத்து மனிதன் மேம்பட்ட நிலை மனம் எனும் பகுத்தறியும் தன்மையால் ஆகும்.

ஓரறிவுயிரில் வேறுபாடு

ஓரறிவுயிரான புல் மரம் இயற்கை அங்கங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு களாக "புறக் காழனவே புல் என மொழிப
அகக் காழனவே மரம் என மொழிப"
- தொல்.பொ.1585

புறத்தே வயிரமும் உட்துளையுமுடையவை புல் எனப்பட்டன. அகத்தே வயிரமுடையவை மரமெனப்பட்டன. இங்ஙனம் இயற்கையை இன்றும் காத்து வரும் தமிழன் ஒவ்வொரு உயிர்களின் வகைகளையும் சிறுவயதிலே மாணவர் அறியும் பொருட்டு பள்ளிப் பாடமாக அமைத்துள்ளனர்.

தாவர அடி வகை

ஒரு தாவரத்தின் அடிப்பகுதியை குறிப்பதற்கான சொற்கள் முறையே
தாள்: நெல் கேழ்வரகு
தண்டு: கீரை வாழை
கோல்: நெட்டி மிளகாய்ச்செடி
தூறு : குத்துச்செடி புதர்
தட்டு/தட்டை: கம்பு சோளம்
கழி:கரும்பின் அடி
கழை : மூங்கிலின் அடி
அடி: புளி வேம்பு முதலியவற்றின் அடி

கிளை பிரிவுகள்

தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் சினை (கிளையின்பிரிவு/ கவை) அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை உயிருள்ள மரத்தின் கிளைப் பகுதிகள் பெரும்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

காய்ந்த அடியும் கிளையும் பெயர் பெறுதல்

காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள்.
சுள்ளி: காய்ந்த குச்சு (குச்சி); விறகு; காய்ந்த சிறு கிளை; வெங்கழி; காய்ந்த கழி கட்டை; காய்ந்த கொம்பும் கவையும் அடியும்.

இலை வகை

தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் செற்கள்.
இலை: புளி வேம்பு முதலியவற்றின் இலை
தாள்: நெல் புல் முதலியவற்றின் இலை
தோகை: சோளம் கரும்பு முதலியவற்றின் இலை
ஓலை: தென்னை பனை முதலியவற்றின் இலை சீண்டு: காய்ந்த தாளும் தோகையும்
சருகு: காய்ந்த இலை.

கொழுந்து வகை

தாவரத்தின்நுனிப்பகுதிகளைக்குறிக்கும் சொற்கள். அவை வரிசைக் கிரமமாக துளிர்/ தளிர்: நெல் புல் கொழுந்து: புலி வேம்பு குருத்து சோளம் கரும்பு தென்னை பனை கொழுந்தாடை: கரும்பு

பூவின் ஏழு நிலைகள்

பூவையரின் எழுநிலை நிலை போல் பூவுக்கும் இலக்கணம் கூறும் தமிழ்.பூவின்

தோற்றநிலை தொடங்கு வாடினநிலை ஈறாக பூவின் ஏழுநிலை வரிசைக்கிரமமாக அரும்பு - மொட்டு - முகை- மலர் -அலர் - வீ -செம்மல்

பிஞ்சு வகை

பூம்பிஞ்சு: பூவோடு கூடிய இளம்பிஞ்சு பிஞ்சு: இளம் காய் வடு: மாவடுமுசு: பலாப்பிஞ்சு கவ்வை : எள்பிஞ்சு குரும்பை: தென்னை பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு முட்டுக்குரும்பை சிறுகுரும்பை இளநீர் முற்றாத தேங்காய் நுழாய் : இளம்பாக்கு கருக்கல்: வாழைப்பிஞ்சு இளநெல் கச்சல்: வாழைப்பிஞ்சு

குலை வகை

ஒன்றுக்கும் மேற்பட்ட விளைபொருள் தொகுதியின் பல பெயர்கள் கொத்து: அவரை துவரை குலை: கொடி முந்திரி தாறு: வாழைக்குலை சீப்பு வாழைத்தாரின் பகுதி அலகு/ குரல்: நெல் தினை முதலியவற்றின் கதிர்.

கெட்டுப்போன காய்கனி வகை

கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கு வழங்கும் சொற்கள்.

கூம்பல்: நுனியில் சுருங்கியகாய் சிவியல்: சுருங்கிய பழம் சொத்தை; புழுபூச்சி காய் அல்லது கனி வெம்பல் சூட்டினால் பழுத்த பிஞ்சு: அளியல் குளுகுளுத்த பழம்;அழுகல்;குளுகுளுத்து நாழிய பழம்/ காய் சொண்டு பதராய்ப்போன மிளகாய்

கோட்டாய்காய் / கூகைக்காய்

கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய் தேரைக்காய் தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்ஒல்லிக்காய்தென்னையில் கெட்ட காய்

பழத்தோல் வகை

பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள். தொலி: மிகமெல்லியது

தோலி: திண்ணமானது

தோடு: வன்மையானது குடுக்கை சுரையின் ஓடு மட்டை தேங்காய் நெற்றின் மேற்பகுதி

உமி: நெல் கம்பு முதயவற்றின் மூடி.

மணிவகை

தானியங்களுக்கு வழங்கும் சொற்கள் கூலம்: நெல் புல்(கம்பு)கடலை: வேர்க்கடலை கொண்டைக்கடலை பயறு: அவரை துவரை விதை: கத்தரி மிளகாய் காழ்: புளி காஞ்சிரை (நச்சுமரம்) முத்து: வேம்பு ஆமணக்கு தேங்காய்: தென்னை முதிரை :அவரை துவரை கொட்டை: மா பனை

இளம் பயிர் வகை

தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்கள் வரிசையாக நாற்று நெல் கத்தரி முதலியவற்றின் இளநிலை. கன்று மா புளி வாழை முதலியவற்றின் இளநிலை குருத்து; வாழையின் இளநிலை பன்னை தென்னையின் இளநிலைகுட்டிவிளாவின்இளநிலை;மரலி /வடலி பனையின் இளநிலை பைஞ்கூழ்; நெல் சோளம் முதலியவற்றின் பசும் பயிர்.

இதுகாறும் கூறியவற்றால் தமிழகத்தின் நாட்டு வளம் தாவரத்தின் பகுதிகளை குறிக்கும் சொற்களின் ஒரு பகுதி ஆகும். இத்துணை வளமுடை மக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். பல மொழியின்று கடன் கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக்குறிக்க, leaf என ஓரேசொல் உள்ளது. ஆயின் இலையைக் குறிக்க மட்டும்,

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
- தொல்.பொருள். 1586

போலவே இலை தாள் தோகை என இலையின மென்மை வன்மைக்கு ஏற்ப பாகுபாடு செய்யப்பட்டது முன்னர்க் காட்டப் பெற்றது. பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாக இருக்க

தமிழ்நாட்டு நெல்லிலோ செந்நெல் வெண்ணெல் கார்நெல் என்றும் சம்பா மட்டை கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச் சம்பா ஆனைக் கொம்பன் சம்பா குண்டுச் சம்பா குதிரை வாலிச்சம்பா சிறுமணிச் சம்பாசீரகச்சம்பாமுதலியஅறுபதுவகைகள் உள்ளன. நாட்டுவளத்திற்கு தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும். இதனால் பண்டைத்தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட பயிர் வகைச் சொற்கள் அனைத்தும் மொழிஞாயிறு தேவநேய பாவாணர் சொல்லாராய்ச்சிக்கட்டுரைகள் என்னும் நூலில் தமிழ் சொல்வளம் என்ற பகுதியினின்று எடுத்தாளப்பட்ட பாடநூலாகும்.

மரபுக்சொற்கள்

பாடநூலின் பயிற்சியாக தாவரங்களின் உறுப்புப்பெயர் மரபுச் சொற்களுடன் பூச்சி பறவைகள் விலங்குகள் - இருப்பிட மரபுச் சொற்கள் கரையான் புற்று ஆட்டுப் பட்டி மாட்டுத் தொழுவம் கோழிப் பண்ணை குருவிக்கூடு சிலந்தி வலை நண்டு எலி வளை யானைக்கூடம் முதலியன அட்டவணைபடுத்தப்பட்டு உள்ளது

ஒலிமரபுச் சொற்கள்

குரங்கு அலப்பும் குயில் கூவும் ஆடு கத்தும் சிங்கம் கர்ச்சிக்கும் முழங்கும் நாய் குரைக்கும் புலி உறுமும் யானை பிளிறும் ஆந்தை அலறும் மயில் அகவும் பாம்பு சீறும் என விலங்குயிர்களுக்குரிய ஒலிக்குறிப்புகள் பாடநூலாக வழங்கப்பட்டுள்ளன.

வினைமரபுச்சொற்கள்

அம்பு எய்தார் ஆடை நெய்தார் பூபறித்தாள் மாத்திரை விழுங்கினான் நீர் குடித்தான் சோறு உண்டான் கூடை முடைந்தார் சுவர் எழுப்பினார் முறுக்கு தின்றாள் பால் பருகினான் போன்ற எளிய வினைமரபுச் சொற்கள் சின்னஞ்சிறார்க்கு பாடமாகப் பட்டுள்ளன.

விலங்குகளின் இளமைப்பெயர் மரபுச் சொற்கள்

ஆட்டுக்குட்டி கோழிக்குஞ்சு குதிரைக் கன்று குரங்குக்குட்டி மான்கன்று யானைக் கன்று சிங்கக்குருளை புலிப்பறழ் அணிற்பிள்ளை அன்னப்பார்பு என்பன போன்ற விலங்கினங்களின் இளமைப்பெயர் அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளது. இதனை

யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்
மானோடு ஐந்தும் கன்று எனற்கு உரிய
-தெ.பொ. 1514

இவ்வாறு இளமைப் பெயர்கள் மட்டுமின்றி ஆண்பால் பெண்பால் விலங்குகள் பறவைகளுக்கும் மரபியலில் நூற்பா கொண்டு விளக்கியவை எளிய உருவில் இளம்பருவ மாணவர்களும் இயற்கையையும் அதில்வாழும்உயிர்ப்பாகுபாடுகள்பற்றியும் பாடமாக அல்லாமல் விளையாட்டுடன் கூடிய பாடமாக எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி உள்ளே உடையவராய் அடுத்த தலைமுறையும் உயிர்களிடத்து அன்புடையோராய் வாழ நல்லதொரு இயற்கை வழிகாட்டியாக உள்ளது.

இயற்கையோடியைந்த அகப்பொருள் இலக்கணம்

பொருள் இலக்கணம் தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய வாழ்வியலுக்கான இலக்கணம். இது அகப்பொருள் புறப் பொருள் என இரண்டு வகைப்படும். ஒத்த அன்புடைய தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது அகத்திணை ஆகும். திணை என்பது ஒழுக்கம் எனப்படும். அகத்திணைக்குள் அடங்காதன எல்லாம் புறத்திணையாகும்.

அகத்திணையின் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை கைக்கிளை பெருந்திணை என ஏழு வகைப்படும்.இவற்றுள் முன்னது ஐந்தும் அன்பின் ஐந்திணைகள் எனப்படும். இவற்றின் அடிப்படையில் அகப்பாடல்கள் எழுதப்பட்டன. அகப்பாடலுக்குரிய கூறுகள் முதற்பொருள்கருப்பொருள்உரிப்பொருள் என்பவைாகும்.

முதற்பொருள் - நிலம் பொழுது இருவகை பெறும். நிலம் திணை சார்ந்து ஐவகையாக பிரித்துள்ளனர் நம் முன்னோர். அவை குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும் முல்லை - காடும் காடு சார்ந்த இடமும் மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும் நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும் பாலை - சுரமும் சுரம் சார்ந்த இடமும்ஆகும்.பொழுது-பெரும்பொழுது சிறு பொழுது என இருவகையாய் கொண்டு காலம் கணித்துள்ளனர்.

பெரும்பொழுது

பெரும் பொழுது என்பது ஓர் ஆண்டின் ஆறு கூறுகளாகும். அவை முறையே கார் காலம் - ஆவணி புரட்டாசி குளிர்காலம் - ஐப்பசி கார்த்திகை முன்பனிக்காலம் - மார்கழிதைபின்பனிக்காலம்-மாசிபங்குனி இளவேனிற்காலம் - சித்திரை வைகாசி; முதுவேனிற்காலம் - ஆனி ஆடி எனப் பிரித்து அக்கால நிலைக்கேற்ற வாழ்க்கை முறையை அமைத்துள்ளனர்.

சிறுபொழுது

சிறுபொழுது என்பது ஒரு நாளின் ஆறு கூறுகளாகும். அவை காலை - 6 மணி முதல் 10 மணிவரை நண்பகல் - காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை எற்பாடு - பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை மாலை - மாலை 6 மணி முதல் இரவு10 மணிவரை யாமம் - மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வைகறை- இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை.

ஐவகைத் திணைக்குரிய பெரும்பொழுது சிறுபொழுது

திணை	பெரும்பொழுது	சிறுபொழுது
குறிஞ்சி	குளிர்காலம் முன்பனிக்காலம்	யாமம்
முல்லை	கார்காலம்	மாலை
மருதம்	ஆறு பெரும் பொழுதுகள்	வைகறை
நெய்தல்	ஆறு பெரும் பொழுதுகள்	எற்பாடு
பாலை	இளவேனில், முதுவேனில், பின்பனி	நண்பகல்

கருப்பொருள்

"தெய்வம் உணாவே மா மரம் புள் பறை செய்தி யாழின் பகுதியொடு தொகை இ அவ்வகை பிறவும் கரு என மொழிப

-தொல்.பொருள்.964

ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வம் மக்கள் உணவு விலங்கு பூ மரம் பறவை ஊர் நீர் பறை யாழ் பண் தொழில் என்பன அந்நிலத்திற்குரிய கருப்பொருள்கள் ஆகும். உதாரணமாக உணவு என்னும் தலைப்பில் குறிஞ்சி - மலைநெல் திணை; முல்லை - வரகுசாமைமருதம்-செந்நெல்வெண்ணெல் நெய்தல் - மீன் உப்புக்குப் பெற்ற பொருள்; பாலை - கூறையாடலால் வரும் பொருள் என இயற்கை பெற்றுள்ள பொலிவை அட்டவணை தாங்கிய பாடநூலக பத்தாம் வகுப்பு மாணவர்கட்கு பயிற்றுவிக்கப்படுகிறது.

உரிப்பொருள்

அகப்பாடல்களுக்கு உரியபொருள் உரிப் பொருள் எனப்படும். முதற்பொருள் கருப்பொருள் பாடலின் உரிப்பொருளை மையப்படுத்த உதவுகின்றன. அவை

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை தேருங்காலை திணைக்குரிய பொருளே

- தொல்.பொருள். 960 .

தொல்காப்பிய நூற்பா முறையே ஐவகை திணைக்குமுரிய உரிப்பொருள் இயற்கை

ஆண்ட தமிழர் தம் வாழ்வு முறை அமைந்ததை பாடமாக வைக்கப்பட்டுள்ளது

நீரின்றி அமையாது உலகு எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க இயற்கையை காக்கும் நீரைப் போல் தமிழர் உலகம் உள்ளது. தமிழ்மொழியை ஆங்கிலம் உள்ளிட்ட எத்தனையோ மொழிகள் காலந்தோறும் இடையீடு செய்தும் அதன் ஐவகை இலக்கணத்துள்ளும் பெரியளவில் மாற்றம் நிகழவில்லை. ஏனெனில் தமிழர் உலகம் இன்றும் தம் வளங்குன்றா இயற்கை வளத்தை பேணி காத்து வருதலால் எழுத்தில் சொல்லில் மாறாதபோது அதனைத் தொடர்ந்து வாழ்வியலும் (பொருள்) அதனை யாக்கும் யாப்பு அணியின் இலக்கணம் மட்டுமன்றி இயற்கையையும் மாற்றாமல் உள்ளமை அறிய முடிகிறது.

முடிவுரை

தமிழ் இலக்கணம் பேச்சு வழக்கு செய்யுள் வழக்கிலும் தனிப்பெரும் சிறப்பு பெறுவதினும் மரபு காக்கும் மாண்பு ஐம்பூதங்கள் வழியும், உயிர்களுக்கும் அதன் உறுப்புகள் ஒலிப்பு இருப்பிடம் பிள்ளைப் பருவம் என அவற்றுக்கு தனித்தனி பெயரிட்டு அழைக்கும் சீர்மைப் பாங்கும் அறிய முடிகிறது.தமிழுக்கே உரிய அகப்பொருள் இலக்கணம் வழி இயற்கை எங்ஙனம் பேணப்பட்டு வருகிறது என்பதையும் அறிய முடிகிறது. இவை அனைத்து மாணவர் தம் பாடநூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்பார்வை நூல்கள்

1. தமிழ் இலக்கண நூல்கள் பதிப்பாசிரியர் ச.வே.சுப்பிரமணியன் மெய்யப்பன் பதிப்பகம்
2. மேலது
3. 7 ஆம் வகுப்பு தமிழ் பாடநூல் முதல் பருவம் மறுபதிப்பு 2024
4. 9 ஆம் வகுப்பு தமிழ் பாடநூல் பதிப்பு 2018
5. 8 ஆம் வகுப்பு தமிழ் பாடநூல் பதிப்பு 2023
6. 8 ஆம் வகுப்பு தமிழ்பாடநூல் பதிப்பு 2020
7. 6 ஆம் வகுப்பு முதல் பருவம் தமிழ் பாடநூல் பதிப்பு 2024
8. மேலது
9. 9 ஆம் வகுப்பு தமிழ்பாடநூல் பதிப்பு 2018.
10. தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-3 தமிழண்ணல் மணிவாசகர் பதிப்பகம்.
11. 10ஆம் வகுப்பு தமிழ் பாடநூல் பதிப்பு 2020
12. தொல்.பொருள்.தமிழண்ணல் மேலது.
13. 10 ஆம் வகுப்பு தமிழ்பாடநூல் பதிப்பு 2020
14. 5 ஆம் வகுப்பு முதற் பருவ தமிழ் பாடநால் பதிப்பு 2025
15. தொல்.பொருள். தமிழண்ணல்
16. 10ஆம் வகுப்பு தமிழ் பாடநூல் பதிப்பு 2025